# பிரிவு – 9

## அரசியலமைப்புச் சட்டத்தின் 73–வது மற்றும் 74–வது திருத்தங்களின் கீழ் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதன் விளைவாக, நிதியைப் பகிர்ந்தளித்தல்

**2.9.1.** அரசியலமைப்புச் சட்டத்தின் 73வது திருத்தத்தின்படி, 11–வது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்கள் ஊரக உள்ளாட்சி மன்றங்களால் நிருவகிக்கப்பட வேண்டும். 12–வது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 இனங்கள், நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளால் நிருவகிக்க அரசியலமைப்பின் 74–வது திருத்தம் குறிப்பிடுகிறது. பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள இனங்கள் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளவையே தவிர முழுமையானதல்ல. மாநில அரசு நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகள் அல்லது ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றத் தகுதியெனத் தான் கருதும் எந்த ஓர் இனத்தையும் ஒப்படைக்கலாம் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**2.9.2.** நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட இருக்கிற 12–வது விவர அட்டவணையில் கண்டுள்ள 18 இனங்களில் 9 இனங்களை நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள், தங்களது சொந்த நிதிகளைக் கொண்டோ அல்லது மாநில அரசின் நிதியுதவியைக் கொண்டோ ஏற்கனவே செயல்படுத்தி வருகின்றன. தற்போது 9 இனங்கள் தொடர்பாக மட்டுமே நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்படுவது பற்றி முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. ஊரக உள்ளாட்சி மன்றங்களில் இருப்பது போல அடுக்குமுறைகள் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் இல்லை. ஒவ்வொரு நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றமும் ஒரு தனி அமைப்பாகும். மாநில நிதி ஆணையம், துறைத் தலைவர்களுடனும் அரசு செயலாளர்களுடனும் விரிவாக விவாதித்து, பொருத்தமான அடுக்குகளில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான மாதிரி செயற்குறிப்பு ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த அதிகாரங்கள் அவசியமாயின், படிப்படியாக பகிர்ந்தளிக்கப்படலாம். இது தொடர்பாக, அரசின் ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. பகுதி IV "செயலாக்க அமைப்பைச் சீரமைத்தல்" என்பதில் இந்த அம்சங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

**2.9.3.** பணிகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான, அரசு ஆணைகள் பிறப்பிக்கும் வரையில் மாநில நிதி ஆணையம் இவ்வாறு அதிகாரங்களை அளிப்பதால் ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஏற்படும் நிதிப் பொறுப்பு பற்றி ஆராயும் நிலையில் இல்லை. எனவே, தற்போது திட்டவட்டமான பரிந்துரைகள் எவையும் செய்யப்படவில்லை. ஆயினும், பணிகளைப் பகிர்ந்தளித்து ஆணைகள் பிறப்பிக்கப்படும்போது, ஏற்கனவே உள்ள பணிகள், நிதிகள், பணியாளரமைப்புகள் ஆகியவையும் உள்ளாட்சி மன்றங்களின், பொருத்தமான நிலைகளில் பகிர்ந்தளிக்கப்படும் என மாநில நிதி ஆணையம் எதிர்பார்க்கிறது. நிதிப் பொறுப்பு குறித்து ஏதேனும் சொற்ப சரிக்கட்டல்கள் தேவைப்பட்டால், அது பற்றி பணிகள் பகிர்ந்தளித்து முடிக்கப்பட்ட பிறகுதான் பரிசீலிக்கமுடியும்.